தலைப்பு 207 - தொல்பொருளியல் திணைக்களம் - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 207 – தொல்பொருளியல் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் தோல் பொருளியல் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2025 மே 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2025 ஜூன் 11 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இவ் அறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2024 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான தொல்பொருளியல் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களில் நிதி நிலைமை, நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுகளை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க பொருண்மையானவை தொடர்ப்பிலும் நியாமான நிலைமையை பிரதிபளிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ் அறிக்கை 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த வியடங்களில் இருந்துதான தாக்கத்தை தவிரத்து எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக ஆக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்கை தயாரிக்கும் அடிப்படை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய 01 ஆம் பக்கம் தொடர்பில் கவணம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்ப பிரமாணம் 150, 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் தோல் பொருளியல் திணைக்களத்தின் பொது திறைசேரியினதும், பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டிற்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால் இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை தோல் பொருளியல் திணைக்களத்தினதும், பொது திறைசேரியினதும், பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மட்டும் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 திகதிய அரச கணக்குகள் வழிகாட்ட இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும், உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் தோல் பொருளியல் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் தோல் பொருளியல் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படை ஒன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களினால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவு ஒன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடகத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள், சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமானதாகவும் உள்ளடக்கப்பட்டதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலை மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு மீதான இணக்கக்கூற்று

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பண “பீ” கணக்கின் மீதிகள் வகைப்படுத்தல் பொழிப்பின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 123,072,884 தொகையாக காணப்பட்டதுடன், கடன் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதி 123,397,072 தொகையக காணப்பட்டமையல் மீதிகளிடையே ரூபா 324,188 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.	மீதிகளிடையே வித்தியாசம் காணப்படுவதுடன், கிரமமாக அந்த வித்தியாசங்களை கண்டறிந்து வருகின்றதெனவும், 2025 ஆண்டில் இது தொடர்பாக கண்டறிவதற்காக புதிய குழுவொன்று நியமனம் செய்யப்படவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.	முற்பண ‘‘பீ’’ கணக்கின் மீதிகள் வகைப்படுத்தல் பொழிப்பில் மற்றும் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதிகளிடையே வித்தியாசத்திற்கான காரணங்களை இனங்கண்டு சரி செய்யப்படும் என.

(ஆ) ஆதனங்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்

ஆதனங்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	கொம்டிரோலர் ஜனரால் அலுவலகத்தினால் 2018 திசெம்பர் 31 திகதி வழங்கியிருந்த இலக்கம் 04/2018 கொண்ட நிதி அல்லாத சொத்துக்களின் பெறுமதியினை	திணைக்களத்திற்கு சொந்தமான சொத்துக்களை கணக்கீடு செய்யும் அலுவல்கள் முறைப் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன், தற்போது விலை மதிப்பீட்டுத்	நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள வாகனங்களின் பெறுமதியை உறுதிப்படுத்தும்

மதிப்பீடு செய்யும் வழிகாட்டலின் பிரிவு 1.3.1 இற்கு இணங்க அனைத்து வாகனங்களுக்குமாக 05 வருடங்களுக்கு ஒருமுறை பெறுமதி மதிப்பீடொன்று பெற்றுக்கொள்ளல் கட்டாயமாக இருந்த போதிலும், அந்தப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உட்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், திணைக்களத்திற்கு சொந்தமான 42 வாகனங்களில் 11 வாகனங்கள் 2023 ஆண்டில் ரூபா 58,375,000 தொகைக்கும், 2024 ஆண்டில் 16 வாகனங்கள் ரூபா 136,500,000 தொகைக்கும் பெறுமதியை பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அந்தப் பெறுமதி 2024 நிதிக்கூற்றுக்களுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.
திணைக்களத்திற்கு சொந்தமான 15 வாகனங்கள் 2024 ஆண்டிற்காக பெறுமதி மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும், 2024 ஆண்டின் போது திணைக்களத்திற்கு சொந்தமான வாகனங்களின் பெறுமதி என ரூபா 35,525,000 தொகை நிதிக்கூற்றுக்களில் உட்படுத்தியிருந்தது. கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள வாகனங்களின் பெறுமதியில் 08 வாகனங்களின் பெறுமதி என ரூபா 15,125,000 தொகை இனங்கண்டிருந்ததுடன், அதில் ரூபா 2,500,000 தொகை பெறுமதியான தொல்பொருளியல் திணைக்களத்திற்கு உரித்தாக்கப்பட்டிருக்காத ஜனாதிபதி அலுவலகத்திற்கு சொந்தமான கப் வண்டி ஒன்றும் அடங்கியிருந்தது. மீதியான ரூபா 20,400,000 இற்கான பெறுமதியினை உறுதிப்படுத்தும் வாகன இலக்கங்களுடனான வாகன எண்ணிக்கை, பெறுமதி தொடர்பான தகவல்கள் 2025 செப்தம்பர் 26 திகதி அளவிலும் திணைக்களத்தினால் இனங்கண்டிருக்கவில்லை. அதன்படி, திணைக்களத்திற்கு சொந்தமான 42 வாகனங்களும் கணக்கீடு செய்யப்பட்டுள்ளனவா என கணக்காய்விற்கு சான்றுகள் காணப்படவில்லை.

திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு அந்த அலுவல்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றதென அறிவிக்கப்பட்டிருந்தது.

சான்றுகளை உறுதிப்படுத்த வேண்டியதுடன், உரிமை உரித்தாக்கப்பட்டுள்ள அனைத்து வாகனங்களும் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ii) 2018 திசெம்பர் 31 திகதி வெளியிடப்பட்ட 04/2018 கொண்ட நிதி அல்லாத சொத்துக்களின் பெறுமதியினை மதிப்பீடு செய்யும் வழிகாட்டலின் பிரிவு 2.3 இற்கு இணங்க அனைத்து 05 வருடங்களுக்கு ஒருமுறை காணிகள் மற்றும் கட்டிடங்கள் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட வேண்டுமெனினும், 2024 திசெம்பர் 16 திகதிய 06/2024 இலக்கம் கொண்ட அரச கணக்கு வழிகாட்டலின் பந்தி 8.2 இன் பிரகாரம் மேலும், அறிவிக்கப்பட வேண்டிய நிதி அல்லாத சொத்துக்களை முறைப் பிரகாரம் இனங்கண்டு கிரயத்திற்கு அல்லது பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதிக்கு கணக்கீடு செய்யப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்ததுடன், திணைக்களத்திற்கு சொந்தமான 15 பிரதேச அலுவலகங்கள் மற்றும் 98 வலைய அலுவலகங்களுக்குரிய காணிகள் மற்றும் கட்டிடங்கள் மீளாய்வாண்டு இறுதி வரை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை.	திணைக்களத்திற்கு சொந்தமான சொத்துக்களை கணக்கீடு செய்யும் அலுவல்கள் முறைப் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன், தற்போது விலை மதிப்பீட்டுத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு அந்த அலுவல்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றதென அறிவிக்கப்பட்டிருந்தது.	நிதி அல்லாத சொத்துக்களை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(இ) கட்டுநிதி மீதி

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
ACA-03 படிவத்தில் 2024 ஆண்டிற்கான கட்டுநிதி கணக்கு தொடர்பான கூற்றில் 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திறைசேரி ஏடுகளின் படி மீதி சூனியமாக காணப்பட்ட போதிலும், திறைசேரி ஏடு (SA70) படி மீதி ரூபா 223,978 தொகையாக காணப்பட்டமையால், வித்தியாசம் ரூபா 223,978 தொகையாக காணப்பட்டது, அந்த வித்தியாசம் ACA-03 படிவத்தில் அனுப்பப்பட்ட போதிலும், திறைசேரி ஏடுகளில் காட்டப்பட்டிருக்காத 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காசு மீதியின் கீழும் பதிவு செய்ய வேண்டியிருந்த போதிலும், அதன்படி பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.	எழுதுவிளைஞர் வழுவொன்றென அறிவிக்கப்பட்டுள்ளது.	நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும் என.

2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம், பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்டிருந்த பின்வரும் பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

முன்னைய ஆண்டிற்காக அறிக்கையின் பந்தியுடன் தொடர்பு	**செயற்படுத்தப்பட்டிருக்காத பரிந்துரை**	**இந்த அறிக்கையின் பந்தியுடன் தொடர்பு**
1.6.1(அ)	தனிப்பபட்ட மீதிகள் பதிவேடு மற்றும் கடன் கட்டுப்பாட்டுக் கணக்குகளிடையே காணப்படுகின்ற இந்த வித்தியாசத்தை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என.	1.6.1(அ)

3. நிதி மீளாய்வு

3.1 செலவு முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரை**
(அ)	04 மீண்டுவரும் செலவு விடயங்களின் மொத்த தேறிய ஏற்பாடுகளின் கூட்டுத்தொகை ரூபா 18,000,000 தொகையாக காணப்பட்டதுடன், செலவு ரூபா 9,436,901 தொகை மற்றும் ஏற்பாடுகளின் சேமிப்பு ரூபா 8,563,099 தொகையாக காணப்பட்டது. அந்த மீதி தேறிய ஏற்பாடுகளில் 42 சதவீத்திலிருந்து 79 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.	இணங்குகின்றேன். நிதிக்கூற்றுக்களில் ஏசீஏ-2(ii) இல் வித்தியாசங்களுக்கான காரணம் குறிப்பிடப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டிருந்தது.	முறையான ஆய்வொன்றுடன் மதிப்பீடுகள் தயாரிக்கபட வேண்டும் என.
(ஆ)	03 மூலதனச் செலவு விடயங்களின் மொத்த தேறிய ஏற்பாடுகளின் கூட்டுத்தொகை ரூபா 28,000,000 தொகையாக காணப்பட்டதுடன், செலவு ரூபா 12,695,587 தொகை மற்றும் ஏற்பாடுகளின் சேமிப்பு ரூபா 15,304,413 தொகையாக காணப்பட்டது. அந்தச் சேமிப்பு தேறிய ஏற்பாடுகளின் 32 சதவீதம் முதல் 74 சதவீதம் வரையான வீச்சொன்றினை கொண்டிருந்தது.	இணங்குகின்றேன். நிதிக்கூற்றுக்களில் ஏசீஏ-2(ii) இல் வித்தியாசங்களுக்கான காரணம் குறிப்பிடப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டிருந்தது.	முறையான ஆய்வொன்றுடன் மதிப்பீடுகள் தயாரிக்கபட வேண்டும் என.

(இ)	207-1-1-0-1508-0/11 செலவு விடயத்தின் கீழ் ஏற்பாடுக செய்யப்பட்டிருந்த ரூபா 500,000 தொகைக்கான மொத்த ஏற்பாடுகளும் சேமிக்கப்பட்டிருந்தது.	207-1-1-0-1508-0/11 - மாற்றுதல் இந்த செலவு விடயத்தில் செலவு ஏற்பட்டிருக்கவில்லை என அறிவிக்கப்பட்டிருந்தது.	முறையான ஆய்வொன்றுடன் மதிப்பீடுகள் தயாரிக்கபட வேண்டும் என.

3.2 வைப்பு மீதிகள்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
திணைக்களத்திற்குரிய 07 வைப்புக் கணக்குகள் தொடர்பாக 02 வருடங்களை மிகைத்துள்ள ரூபா 33,052,742 இற்கான வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 570 மற்றும் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வைப்புக்களின் பகுதியொன்று அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டது. பழைய வருடங்களின் மீதிகள் தொடர்பாக தீர்ப்பதற்காக 2024 ஆண்டின் போது நடவடிக்கை எடுப்பதற்காக போதியளவு காலம் ஒன்று காணப்படாததுடன், 2025 ஆண்டு முடிவடைய முன்னர் அவ்வாறு வைப்பு மீதிகளை தீர்ப்பதற்கு எதிர் பார்க்கப்படுகின்றது என அறிவிக்கப்பட்டிருந்தது.	நிதிப் பிரமாணம் 570 மற்றும் 571 இன் பிரகாரம் செயற்பட வேண்டும்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 தூர நோக்கு மற்றும் பணிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
தொல்பொருளியல் திணைக்களம் நிறுவப்பட்ட குறிக்கோளிடையே ஒட்டுமொத்த தொல்பொருளியல் உரிமையை பாதுகாத்தல் மற்றும் தொல்பொருளியல் சார் உரிமைகளை ஆவணப்படுத்தல் உட்படுத்தப்பட்டிருந்த போதிலும், 2019 ஜனவரி 01 திகதி முதல் 2024 செப்தம்பர் 30 திகதி வரை நாடு பூரகவும் பரந்து காணப்படுகின்ற 275 கற்பதிவுகளில் 110 தொகை பிரதி செய்யப்பட்டு வாசித்து வெளியிட்டிருக்காததுடன், கற்பதிவுகளை பிரதி செய்வதற்காக 2019 முதல் 2024 செப்தம்பர் 30 வரை ரூபா 2,166,780 தொகை செலவிடப்பட்டிருந்தது. நாடு பூராகவும் பரந்து காணப்படுகின்ற	2019 ஜனவரி 01 திகதி முதல் 2024 செப்தம்பர் 30 திகதி வரையான காலப் பகுதியில் கல்வெட்டு மற்றும் நாணயவியல் பிரிவின் மூலம் 275 கல்வெட்டு சாசனங்கள் பிரதி பண்ணல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த 275 கல்வெட்டு சாசன எண்ணிக்கையில் 53 கல்வெட்டு சாசன எண்ணிக்கை அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டதுடன், மீதியான 112 சாசன எண்ணிக்கை செயற்திட்ட இறுதி அறிக்கையில் வெளியிடப்பட்டது. அதேபோல், மேற்கூறிய பிரதி பண்ணப்பட்ட கல்வெட்டு சாசனங்களில் மீதியான எண்ணிக்கையாகிய 110	கல்வெட்டு சாசன அட்டவணைப்படுத்தல் கருமங்கள் விரைவாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

	கற்பதிவுகளை அட்டவணைப்படுத்தல் காலத்தின் தேவைப்பாடாக காணப்பட்டதுடன், இந்த ஆவணங்கள் அழிவடைதலை தடுப்பதற்காக கற்பதிவுகளை அட்டவணையிடும் கருமம் விரைவாக மேற்கொள்ளப்பட வேண்டிய முக்கிய கருமம் ஒன்றென இனங்கண்டிருக்கவில்லை.	கல்வெட்டு சாசன எண்ணிக்கை 2025 ஆண்டில் வாசித்து முடிவடையப்படவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.	

4.2 திட்டமிடல்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	திணைக்களத்தினால் 2024 ஆண்டின் போது ரூபா 17 மில்லியன் பெறுமதியான 33 செயற்திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உட்படுத்தாமல் 2024 ஆண்டில் செயற்படுத்தப்பட்டிருந்ததுடன், 2024 ஆண்டு இறுதியின் பின்னர் அந்த செயற்திட்டங்களுடன் செயல் நடவடிக்கைத் திட்டத்தை திருத்தி அங்கீகாரத்திற்காக 2025 ஜனவரி 15 திகதி அமைச்சுச் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2024 திருத்திய பெறுகைத் திட்டம் 2025 பெப்ரவரி 17 திகதி அமைச்சுச் செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.	இணங்குகின்றேன்.	செயல் நடவடிக்கைத் திட்டத்தின் திருத்தங்கள் உரிய சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்டு தாமதம் இன்றி அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டும்.
(ஆ)	2024 பெப்ரவரி 05 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த 2024 ஆண்டின் பெறுகைத் திட்டம் அமைச்சுச் செயலாளரினால் அங்கீகரித்திருக்காததுடன், திருத்திய பெறுகைத் திட்டம் 2025 பெப்ரவரி 17 திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்தது. 2024 திருத்தத்திற்கு முன்னர் தயாரிக்கப்பட்ட பெறுகை திட்டத்தின் படி கொள்வனவு செய்ய வேண்டியிருந்த ரூபா 2,195,000 இற்கான பண்டங்கள் கொள்வனவு செய்திருக்காததுடன், திருத்திய பெறுகைத் திட்டத்தின் படி ரூபா 2,421,859 இற்கான பண்டங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அதன்படி, பெறுகைத் திட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டிருந்த மாற்றங்கள் உரிய சந்தர்ப்பத்திலே அமைச்சுச் செயலாளரின்	இணங்குகின்றேன்.	பெறுகைத் திட்டத்தின் திருத்தங்களுக்கு உரிய சந்தர்ப்பத்திலேயே அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் பெறுகைத் திட்டத்தை திருத்தி அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது.

4.3 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2024 செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க திணைக்களத்தினால் 512 செயற்திட்டங்கள் செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும், அவற்றில் ரூபா 24.95 மில்லியன் தொகை பெறுமதியான 42 செயற்திட்டங்கள் செயற்படுத்தியிருக்கவில்லை. மேலும், செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உட்படுத்தப்பட்டு ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த செயற்திட்டமொன்றிற்காக புதிய செயற்திட்டத்திற்கான ஏற்பாடுகளை மாற்றும் போது செயல் நடவடிக்கைத் திட்டத்தின் திருத்தங்களுக்காக அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொண்டிருக்கவில்லை.	இணங்குகின்றேன்.	வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டியதுடன், ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள் புதிய செயற்திட்டங்களுக்கு மாற்றும் போது உரிய அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டும்.
(ஆ)	அரச கணக்குத் திணைக்களத்தின் SA/MAA/GRG/01 இலக்கம் கொண்ட மற்றும் 2024 ஜுலை 18 திகதிய கடிதத்தின் பந்தி 04 இன் பிரகாரம் உள்நாட்டு உதவிகளை கணக்கீடு செய்யும் செய்முறைக்காக நடவடிக்கை முறை கைநூலொன்று (Procedure Manual) அறிமுகப்படுத்தல் அத்தியவசியமானது என சுட்டிக்காட்டியிருந்த போதிலும், 2024 திசெம்பர் 31 வரை அதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	உள்நாட்டு உதவிகளை கணக்கீடு செய்யும் செய்முறையொன்று திணைக்களத்தில் செயற்படுத்தப்பட்டிருக்காததுடன், உள்நாட்டு உதவிகளின் தேவைப்பாடு மற்றும் தன்மையை இனங்கண்டு திறைச்சேரியுடன் கலந்துரையாடி அதன்படி பணமாக கிடைக்கும் உள்நாட்டு உதவிகளை முறைப் பிரகாரம் கணக்கீடு செய்தல் தற்போது மேற்கொள்ளப்பட்டதுடன், பண்டங்கள் மற்றும் பொருட்கள் கிடைத்தல் கணக்கீடு செய்தல் தொடர்பாக திறைசேரியுடன் கலந்துரையாடப்பட்டு வருவதுடன், கணக்கீடு செய்த பின்னர் நடவடிக்கை முறைக்	அரச கணக்குத் திணைக்களத்தின் அறிவுரையின் படி உள்நாட்டு உதவிகளை கணக்கீடு செய்யும் நடவடிக்கை முறைக் கைநூல் தயாரிக்கப்பட வேண்டும் என.

		கைநூல் அறிமுகப்படுத்தும் அலுவல்களை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என அறிவிக்கப்பட்டிருந்தது.	
(இ)	பணிப்பாளர் கட்டிடக் கலை பாதுகாப்பாளரினால் களப் பரிசோதனை நிறைவேற்றிய பின்னர் பரிசோதனை மேற்கொண்ட நாளில் பாதுகாப்புச் செயற்திட்டத்தில் காணப்பட்ட நிலைமை அதற்கு வழங்கப்பட்ட அறிவுரைகள் மற்றும் நிறைவேற்றப்பட்ட பாதுகாப்புக்கள் தொடர்பான விபரங்களை உள்ளடக்கி தொல்பொருளியல் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிக்கையொன்று சமர்ப்பித்திருக்கவில்லை.	எதிர் காலத்தில் செயற்திட்டத்தில் காணப்பட்ட நிலைமை அதற்காக வழங்கப்பட்ட அறிவுரைகள், நிறைவேற்றப்பட்ட பாதுகாப்பு தொடர்பான விபரங்கள் அடங்கிய அறிக்கையொன்று தொல்பொருளியல் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்புவதற்கு அறிவுரை வழங்கப்பட்டதென அறிவிக்கப்பட்டிருந்தது.	களப் பரிசோதனையின் போது வழங்கியிருந்த அறிவுரைகள் மற்றும் நிறைவேற்றப்பட்டிருந்த பாதுகாப்பு விடயங்கள் அடங்கிய அறிக்கை பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட வேண்டும் என கடமை அட்டவணையில் உட்படுத்தப்பட வேண்டும்.

4.4 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2025 மார்ச் 28 திகதி தொல்பொருளியல் பணிப்பாளர் நாயகத்தின் D.Arch/DG/3-13 (2025) கடிதத்தில் பரமாகந்த குகை விகாரையின் கூரை பாதுகாப்பு வழங்கிய பின்னர் மழை நீர் குகை விகாரைக்கு ஒழுகுவதனால் அதனை உரிய முறையில் பாதுகாக்கப்பட்டிருக்கவில்லை எனவும், கட்டிடக் கலை பணிப்பாளர் மற்றும் உதவிப் பணிப்பாளர் அறிவுரை வழங்கியிருக்கவில்லை எனவும், முறையான மேற்பார்வை ஒன்றுடன் இந்த மதிப்பீட்டிற்காக பிரிவுத் தலைவர்களினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. பரமாகந்த குகை விகாரையின் நினைவுச் சின்னத்திற்கு சேதம் ஏற்பட்டிருந்ததெனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. கூரையை பாதுகாப்பதற்காக ரூபா 2,430,184 தொகை செலவளிக்கப்பட்டிருந்ததுடன், முறையான கண்காணிப்பு மேற்கொள்ளப்படாமையால் இந்த செலவு மேற்கொள்ளல் பயனற்ற செலவொன்றாக காணப்பட்டது.	2024.09.05 / 06 திகதிகளில் அந்த இடத்தை பரிசோதனை செய்வதற்காக செல்ல வேண்டியிருந்த போதிலும், ஜனாதிபதித் தேர்தலுக்காக தபால் மூல வாக்களிப்பு நடைபெறல் மற்றும் தொல்பொருளியல் அறிவுரைக் கூட்டம் நடாத்தப்படல் அதற்காக சந்தர்ப்பம் பணிப்பாளர் (கட்டிடக் கலை) அவர்களுக்கு முடியாமல் போனது. பரமானந்த குகை விகாரைக் கூரைக்கு பாதுகாப்பு வழங்கிய பின்னர் மழை நீர் குகை விகாரையினுள் ஒழுகுவதை தடுத்துக் கொள்வதற்காக தற்காலிக செய்முறையாக தகரமொன்று பொறுத்தப்பட்டிருந்தது. முன்னைய பணிப்பாளர் நாயகத்தினாலும் இந்த இடம் பரிசோதனை செய்யப்பட்டு பணிப்பாளர் (கட்டிடக் கலை) இற்கு அறிவுரை வழங்கப்பட்டிருந்தது. எதிர் காலத்தில் இந்தக் கருமத்தை பரிசோதனை செய்து நிறைவேற்றிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.	முறையான கண்காணிப்பொன்றுடன் அலுவல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என.

4.5 செயற்திட்டங்கள் மேற்கொள்வதில் தாமதம்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2024 ஆண்டில் 50 சதவீதத்திற்கு குறைவான பௌதீக செயலாற்றுகை ஒன்றினை காட்டிய 46 திட்டங்கள் காணப்பட்டதுடன், இந்த செயற்திட்டங்களுக்காக ரூபா 61.91 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அந்தப் பணத்திலிருந்து ரூபா 41.79 தொகை மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. அதேபோல் ரூபா 31.52 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்த 22 செயற்திட்டங்கள் ஆண்டின் போது செயற்படுத்தியிருக்கவில்லை.	இதன்படி, சேமிப்பு ரூபா 117.29 மில்லியன் ஆகும். அது மொத்த தேறிய ஏற்பாடுகளில் 31 சதவீதம் என இனங்கப்படுகின்றதென அறிவிக்கப்படுகின்றது.	ஆண்டின் போது கிடைக்கக்கூடிய ஏற்பாடுகளை ஆக்கபூர்வமாக செலவிடப்பட வேண்டும்.

4.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
1998 இன் 24 ஆம் இலக்க தொல்பொருள் (திருத்திய) சட்டத்தின் 10 ஆம் பிரிவின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ள திணைக்களம் நிறுவப்பட்டுள்ள குறிக்கோள்கள் ஆவது தொல்பொருள் உரிமைகளை பாதுகாத்தல் மற்றும் பேணிச் செல்லல் தொல்பொருளியல் சார் உரிமையின் அனைத்து பிரிவுகள் தொடர்பாகவும், விஷேடமாக முன்னைய வரலாற்று, ஆரம்ப வரலாற்று, புராதன வரலாற்று, மத்திய வரலாற்று, பின்னைய வரலாற்று காலங்கள் மற்றும் பொதுவான அல்லது நிச்சயிக்கப்பட்ட முறைகள் மற்றும் பயிற்சிகள் தொடர்பாக ஆய்வுகள் மேற்கொள்ளல், தொல்பொருளியல் உரிமைகள் தொடர்பாக ஆவணங்கள் தயாரித்தல், தொல்பொருளியல்சார் சேதங்களை மதிப்பாய்வு செய்தல் ஆகிய கருமங்களை நிறைவேற்றுவதற்காக திணைக்களத்தின் தலைமை அலுவலகத்திற்கு மற்றும் 15 பிரதேச அலுவலகங்களுக்கு ஈடுபடுத்த வேண்டிய வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவு என தொடர்பாக மதிப்பாய்வொன்று மேற்கொண்டு தேவைப்பாட்டினை தெளிவாக இனங்கண்டிருக்கவில்லை.	இணங்குகின்றேன். திணைக்களத்தில் தற்போது காணப்படுகின்ற வாகனங்களின் எண்ணிக்கை, அந்த வாகனங்களின் நிலைமை மற்றும் தன்மையை கவனம் செலுத்தி திணைக்களத்தின் பணிப்பொறுப்புக்கள் தொடர்பாக காணப்படுகின்ற தேவைப்பாடுகள் அடிப்படையாகக் கொண்டு இந்த திணைக்களத்திற்கு தேவைப்பட வேண்டிய வாகன வகை மற்றும் வாகன எண்ணிக்கை எத்தனை என தொடர்பாக விஷேட குழுவொன்றிற்கு சமர்ப்பித்து பரிந்துரை பெற்றுக்கொள்ளல் பொருத்தம் என அவதானிப்பு மேற்கொள்ளப்படுவதுடன், அதற்குரிய திணைக்களக் குழு நிறுவப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.	திணைக்களத்தை நிறுவிய குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக தேவையான வாகனங்களின் எண்ணிக்கையை இனங்காண வேண்டியுள்ளது.

4.7 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2018 ஒக்தோபர் 09 திகதி முதல் 2024 செப்தம்பர் 30 திகதி வரை நடைபெற்ற 11 வாகன விபத்துகள் தொடர்பான நட்டங்களின் பெறுமதி ரூபா 6,520,620 தொகையாக காணப்பட்டதுடன், இது தொடர்பாக நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	இந்த வாகன விபத்துக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் இறுதி அறிக்கை வழங்கியிருக்காத வாகன விபத்துக்களுக்காக நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் விசாரணைக் குழு நியமனம் செய்யப்பட்டுள்ளதுடன், அந்தக் குழுவினால் குறிப்பிட்ட அறிக்கை வழங்கப்பட்ட பின்னர் அது தொடர்பாக விரைவாக தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.	நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.8 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	இறத்தல், ஓய்வு பெறல், வேலை இடைநிறுத்தப்படல் மற்றும் சேவையை வரிதாக்குதல் ஆகிய காரணங்களினால் திணைக்களத்தில் தற்போது சேவையில் காணப்படாத ஊழியர்களிடம் இருந்து மற்றும் உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 5,031,312 தொகைக்கான கடன் மீதிகளிடையே 05 வருடங்களை மிகைத்துள்ள மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,413,619 தொகையாகும். நீண்ட காலமாக காணப்படுகின்ற இந்த நிலுவை கடன் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்திற்கு இந்த இந்த உத்தியோகத்தர்களின் ஓய்வூதியத்திலிருந்து கழித்துக்கொள்வதற்காக கடிதம் ஒன்றின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. சேவையை வரிதாக்கிய உத்தியோகத்தர்களின் நிலுவை மீதி தொடர்பாக திணைக்களத்தின் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், தொடர்ந்தும் அந்தக் குழுவின் மூலம் தேவையான தகவல்களை பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றதென அறிவிக்கப்பட்டிருந்தது.	தாபனக் கோவையின் xxiv அத்தியாயத்தின் பிரிவுகள் 4.2.5, 4.4, 4.5.5 மற்றும் 4.6 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஆ)	திணைக்களத்தின் 15 பிரதேச அலுவலகங்களில் செயற்படுத்தப்படுகின்ற விரல் அடையாள இயந்திரங்கள் தலைமை அலுவலகத்தின் தர முறைமைக்கு தொடர்புபடுத்தி பிரதேச அலுவலகங்களின் உத்தியோகத்தர்களின் தின வரவினை தலைமை அலுவலகத்திலிருந்து பரிசோதனை செய்ய முடியுமானவாறு தயாரித்திருக்காததுடன், பிரதேச அலுவலகங்கள், வலய அலுவலகங்கள், பிரதேச நூதனசாலைகள் மற்றும் ஏனைய தொல் பொருளியல் இடங்கள் அடங்கிய 25 இடங்களுக்காக விரலடையாள இயந்திரங்கள் பயன்படுத்த வேண்டிய தேவைப்பாடு பிரதேச உதவிப் பணிப்பாளர்களினால் பிரதான அலுவலகத்திற்கு அறிவுறுத்தியிருந்த போதிலும், அதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	உத்தியோகத்தர்கள் கடமைக்கு வரும் நேரம், வெளிச் செல்லும் நேரம், உதவிப் பணிப்பாளரினால் அவதானிக்கப்படுகின்றது. புதிய விரல் அடையாள இயந்திரம் கொள்வனவு செய்வதற்கு போதியளவு ஏற்பாடுகள் காணப்படாமையால் சில வலைய அலுவலகங்களில் விரல் அடையாள இயந்திரம் காணப்படவில்லை என அறிவிக்கப்பட்டிருந்தது.	உள்வருதல் மற்றும் வெளிச் செல்லல் முறையாக பதிவு செய்வதற்காக விரல் அடையாள இயந்திரங்கள் பயன்படுத்தப்பட வேண்டும்.
(இ)	வலைய அலுவலகங்கள், நூதனசாலைகள், பிரதேச தொல்பொருளியல் அலுவலகங்கள், தொல்பொருள் இடங்கள் உட்பட 21 இடங்களில் செயற்படாமல் காணப்படுகின்ற விரலடையாள இயந்திரங்களின் திருத்த வேலை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன், காலி கோட்டை விஷேட வலையம், ஹிக்கடுவ வலையம், மாத்தறை நட்சத்திரக் கோட்டை நூதனசாலை ஆகிய தொல்பொருள் இடங்களுக்கு உரித்தான விரல் அடையாள இயந்திரங்கள் திருத்த வேலைக்காக உரிய சேவை இடங்களுக்கு வழங்கப்பட்டு ஒரு வருடத்திற்கு மிகையான காலம் கடந்திருந்த போதிலும், அவற்றை செயற்படு நிலைக்கு மாற்றியிருக்கவில்லை. மேலும், தலைமை அலுவலகம், அம்பாறை அலுவலகம் மற்றும் அதனொடு தொடர்புடைய 03 வலைய அலுவலகங்கள், மேல் மாகாண அலுவலகம், கோட்டே நூதனசாலை, உடுகம்பொல வலைய அலுவலகம் ஆகிய இடங்களில் பொறுத்தப்பட்டிருந்த விரல் அடையாள	பிரதேச உதவிப் பணிப்பாளர்களினால் வலைய உத்தியோகத்தர்களுக்கு மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களுக்கு கடமைக்கு வருதல், வெளிச் செல்லல், விடுமுறை பெற்றுக்கொள்ளல் தொடர்பான பதிவேடு நாளதுவரையாக பேணிச் செல்வதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.	செயற்படாமல் காணப்படும் விரல் அடையாள இயந்திரங்களை திருத்த வேலை மேற்கொள்ள வேண்டியதுடன் மற்றும் சேவை உடன்படிக்கைகளுக்கு அணுகுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

	இயந்திரங்களுக்காக 2024 ஆண்டிற்கான சேவை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.		
(ஈ)	2024 செப்தம்பர் மாதத்திற்குரிய இலங்கை டெலிகொம் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 110,793 இற்கான நிலுவைத் தொகையை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன், இந்த நிலுவை மீதி 2019 ஆண்டிற்கு முன்னர் இருந்து காணப்படுகின்றதென அவதானிக்கப்பட்டது. திணைக்களதின் 04 நேர் தொலைபேசிகளுக்காக தொடர்புகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த இலக்கங்களுக்காக தொலைபேசிகள் பொறுத்தியிருக்காததுடன், 2019 ஆண்டு முதல் 2024 ஆண்டு வரை ரூபா 262,258 இற்கான தொகையொன்று மாதாந்த நிலையான கட்டணம் என கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக எதுவித நடவடிக்கையும் எடுக்காமல் நிலையான கட்டணம் தொடர்ச்சியாக செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது.	பில்பத்திரங்களை முறைப் பிரகாரம் செலுத்துவதற்கும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதென அறிவிக்கப்பட்டிருந்தது.	நிலுவை பில்பத்திரங்கள் விரைவாக தீர்க்கப்பட வேண்டியுள்ளதுடன், தற்போது காணப்படும் சிக்கல்களை நிவர்த்தி செய்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(உ)	2023 ஆகஸ்ட் அறிமுகப்படுத்திய ITMIS முறைமை செயற்படுத்தல் தொடர்பாக நிதியமைச்சின் மூலம் பயிற்சியொன்று வழங்கப்பட்டிருந்த போதிலும், ஒவ்வொரு மாதமும் 20 திகதியின் பின்னர் தொடர்ச்சியாக இணையத்துடன் தொடர்புபட்டு கடமை மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும், தரவுகள் போதியளவாக காணப்படாமையினால் அனேகர் ஒரே தடவையில் தொடர்புபட்டு முயற்சி எடுக்கும் போது முறைமை துண்டிக்கப்படுதல் மற்றும் தாமதமடைதல் நிலைமையின் காரணமாக திணைக்களத்தின் ITMIS முறைமை செயற்படுதல் நடைபெறவில்லை என அவதானிக்கப்பட்டது.	கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை.	ITMIS முறைமை திணைக்களத்தில் செயற்படுத்த வேண்டும்.
(ஊ)	பாஹியங்கல தொல்பொருளியல் குகை ஆய்விற்கான தங்கும் வசதிகளை பெற்றுக்கொள்வதற்கு தொல்பொருளியல் திணைக்களத்தின் உத்தியோகத்தர் தொகுதியொன்று, வீடு வாடகைக்கு எடுத்தல் தொடர்பாக திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வாளரினால் 2023 நவம்பர்	இது தொடர்பான ஆரம்ப விசாரணைக் குழு 2024 ஜனவரி 14 திகதி நியமனம் செய்யப்பட்டிருந்ததுடன், அதன் பின்னர் மூன்று சந்தர்ப்பங்களில் மீண்டும் குழுக்கள் நியமிக்கப்பட்டிருந்தது. 2025 பெப்ரவரி 17 திகதி இறுதிக்	ஆரம்ப விசாரணை அலுவல்கள் விரைவாக பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

	மாதம் விசாரணையொன்று மேற்கொண்டு அது தொடர்பான பரிந்துரையுடனான இரகசிய விசாரணை அறிக்கையொன்று பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது. தொல் பொருளியல் பணிப்பாளர் நாகத்தினால் ஆரம்ப விசாரணைக் குழு 2024 ஜனவரி 14 திகதி நியமனம் செய்யப்பட்டிருந்ததுடன், மூன்று சந்தர்ப்பங்களில் மீண்டும் குழுக்கல் நியமிக்கப்பட்டிருந்ததுடன், 2025 பெப்ரவரி 17 திகதி இறுதி ஆரம்ப விசாரணைக் குழு தொல் பொருளியல் பணிப்பாளர் நாயகத்தினால் நியமனம் செய்யப்பட்டிருந்த போதிலும், ஆரம்ப விசாரணையின் அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.	குழு நியமனம் செய்துள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.	
(எ)	அங்கீகாரமற்ற அகழ்வுகளை தொல்பொருளியல் திணைக்களத்திற்கு அறிவித்தல் தொடர்பாக ஆய்வுகள் மற்றும் ஆவணப்படுத்தும் பிரிவின் செயற்படு முறைமைக் கோவையின் 5.1.3 பந்தியின் படி தகவல் கிடைத்தவுடன், பிரதேசததின் தொல்பொருள் பாதுகாப்பு பொலிஸ் பிரிவுடன் இணைந்து செயற்பட வேண்டும் எனவும், அங்கு 5.1.4 பந்தியின் படி சம்பவம் நடைபெற்ற இடத்தை இரண்டு நாட்களில் பரிசோதனை மேற்கொண்டு கலே 19 படிவத்தின் மூலம் தகவல்கள் அறிவிக்கப்பட வேண்டிய போதிலும், கலே 19 படிவத்தின் 03 நாட்கள் கடக்க முன்னர் தலைமை அலுவலகத்தின் ஆய்வு மற்றும் ஆவணப்படுத்தும் பிரிவிற்கு அனுப்ப வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. அதன்படி, குறிப்பிட்ட நிகழ்வு 05 நாட்களுக்குள் தலைமை அலுவலகத்திற்கு அறிவிக்கபடபட்ட வேண்டியிருந்த போதிலும், மேற்கொள்ளப்பட்ட தெரிவு பரிசோதனையின் படி அங்கீகாரமற்ற 08 அகழ்வுகள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவிலலை.	அங்கீகரமற்ற அகழ்வு ஒன்று பரிசோதனை அறிக்கை சமர்ப்பிப்பதற்கு தாமதம் ஏற்படல், இந்த அகழ்வின் போக்குவரத்து வசதிகள் காணப்படாத காட்டுப் பிரதேசத்தில் நடைபெறுவதனால் தொல்பொருளியல் உத்தியோகத்தருக்கு குறிப்பிட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களுடன் இடத்தை பரிசோதனை செய்வதற்கு போக்குவரத்து வசதிகள் காணப்படாமை, திணைக்களத்தில் காணப்படுகின்ற கப் வண்டி அடிக்கடி இடர்களுக்குள்ளாகுதல், அதிக எண்ணிக்கையான கடமைகளை மேற்கொள்ள நேரிடுதல் மற்றும் போதியளவு எரிபொருள் காணப்படாமை ஆகிய விடயங்களின் காரணமாகவே என அறிவிக்கப்பட்டிருந்தது.	அங்கீகாரமற்ற அகழ்வு தொடர்பான தகவல்களை விரைவாக பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஏ)	தோனிகல தொல்பொருளியல் இடம் பொது மக்களின் பார்வைக்காக திறந்து வைக்கும் குறிக்கோள்களுடன் அத்தியவசியமான நிர்மாண வேலைகளுக்காக 2022 இட அபிவிருத்தித் திட்டம் செயற்படுத்தியிருக்கவில்லை.	2022 பெப்ரவரி 07 திகதி இந்த அபிவிருத்தித் திட்டம் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், எதிர்பார்த்த ஏற்பாடுகள் கிடைக்கப் பெறாமையால் செயற்படுத்தப்படவில்லை. 2026	தொல்பொருளியல் இடங்கள், நினைவுச் சின்னங்கள் பாதுகாப்பதற்கு திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும் என.

		ஆண்டின் போது திட்டத்தை செயற்படுத்துவதற்காக பௌத்தாலோக மன்றத்தினால் அனுசரணை வழங்குவதற்காக வாய்மொழி மூலம் இணக்கம் வெளியிடப்பட்டிருந்தது. அதன்படி, தொடர் நடவடிக்கை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதேபோல், 2025 ஆண்டில் தோனிகல கல்வெட்டு சாசனத்திற்காக மூடுகூரையொன்று தயாரிக்கப்பட்டு சுற்றுலா பிரயாணிகளுக்காக திறப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என அறிவிக்கப்படுகின்றது.	
(ஐ)	போர்த்துக்கேயர்களினால் நிர்மாணிக்கப்பட்டு ஒல்லாந்தரினால் புனரமைக்கப்பட்டிருந்தது என மூலவள சான்றுகள் காணப்படுகின்ற மன்னார் மாவடடத்தில் முசலி பிரதேச செயலகப் பிரிவின் அரிப்பு கிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் முக்கரிப்புத்துறை கிராமத்தில் அமைந்து 0.4465 ஹெக்டயர் காணிப் பிரதேசம் ஒன்று முழுவதும் பரவியுள்ள அரிப்பு அரண் 2013 ஆகஸ்ட் 16 திகதி 1823/73 இலக்கம் கொண்ட வர்த்தமானியின் மூலம் பழைய / பாதுகாப்பு நினைவுச் சின்னம் என வெளியிடப்பட்டிருந்த போதிலும், 2024 திசெம்பர் 31 திகதி வரை தொல்பொருள்சார் கருமமொன்று மேற்கொண்டிருக்கவில்லை.	இணங்குகின்றேன்.	சட்டம், வர்த்தமானி அறிவித்தில், உள்ளக செயற்பாட்டு முறைமை மற்றும் உள்ளகச் சுற்றறிக்கையின் பிரகாரம் தொல்பொருளியல் காணிகள் பாதுகாக்கப்பட வேண்டும்.
(ஒ)	மன்னார் மாவட்டத்தில் நானாட்டான் பிரசேத செயலகப் பிரிவில் அமைந்துள்ள முருங்கன் வைத்தியசாலை வளவில் அமைந்துள்ள 160 சென்றிமீற்றர் நீளம் 61 சென்றிமீற்றர் அகலம் கொண்ட வாரியக் கடிதம் கி.பி. 2 – 3 ஆம் நூற்றாண்டுகளுக்கு உரியவை என கணிக்கப்பட்டதுடன், அங்கு தேய்வடைந்திருந்த பிராமணரல்லாத எழுத்துக்கள் காணக்கூடிய வாரியக் கடிதம் 2014 ஜுன் 20 திகதிய 1868 இலக்கம் கொண்ட வரத்தமானியின் மூலம் பழைய பாதுகாக்கப்பட வேண்டிய நினைவுச் சின்னம் என	பாதுகாப்பு வேலி நிர்மாணிப்பதற்கு தேவையான தலையீடு மேற்கொள்ள வேண்டும் என 2025 ஏப்ரல் 22 திகதி தொல்பொருளியல் பணிப்பாளர் நாயகத்தினால் வட மாகாண பிரதான செயலாளருக்கு எழுத்துமூல வேண்டுகோளொன்று மேற்கொள்ளப்பட்டதுடன், அதன் பிரதியொன்று பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர், வைத்திய அதிகாரி அவர்களுக்கும் அனுப்பப்பட்டது. பிரதேச சுகாதார சேவைப்	சட்டத்தின் மூலம் வழங்கியிருந்த ஏற்பாடுகளின் பிரகாரம் தொல் பொருளியல் நினைவுச் சின்னங்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	வெளியிடப்பட்டிருந்த போதிலும், வைத்தியசாலையின் ஊழியர்கள் அங்கு உட்காருவதன் காரணமாக பாதுகாப்பற்ற முறையில் எழுத்துக்கள் அழியப்பட்டு காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது.	பணிப்பாளரினால் விசாரிக்கப்பட்டதுடன், 2025 மே 28 திகதி நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இது தொடர்பாக கலந்துரையாடப்பட்டதென அறிவிக்கப்பட்டிருந்தது. இதன்படி, பாதுகாப்பு வேலி நிர்மாணிப்பதற்கான பரிந்துரைகள் வழங்கும் கருமம் மன்னார் சுகாதார சேவைப் பணிப்பாளருக்கு சாட்டப்பட்டிருந்ததென அறிவிக்கப்பட்டது. எவ்வாறாயினும், மேற்கூறிய தரப்பினர் எவரினதும் இணக்கப்பாடுகள் காணப்படாமையால் பாதுகாப்பு வேலி நிர்மாணிக்கு அலுவல்கள் இதுவரை மேற்கொள்ள முடியாமல் போனது என.	
(ஓ)	கந்தரோடே (கந்துருகொட) தொல்பொருளியல் இடத்தில் சிறிய தூபிகள் காணப்படுகின்ற வளாகத்தில் மழை நீர் நிரம்பிச் செல்வதன் காரணமாக அழிவுக்குள்ளாகி பாதுகாப்பு தூபத்தின் பகுதியொன்றுடனான வளாகத்தின் மழை நீர் வடிந்து செல்வதற்காக குழாய் முறைமையொன்று விதிப்பதற்காக 2016 ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ரூபா 534,150 தொகை மதிப்பீட்டின் மீது ரூபா 67,000 தொகை செலவிடப்பட்டு கொள்வனவு செய்திருந்த கியும் குளாய்கள் விளைவற்று வளாகத்தில் குவிக்கப்பட்டு காணப்பட்டது.	கியும் குழாய்கள் விரிக்கும் அலுவல்களுக்கு பிரதேச செயலாளரின் எதிர்ப்பு வெளியிடப்பட்டதனால், கியும் குழாய்கள் விரித்தலில் சிக்கல் தன்மையொன்று காணப்பட்டது. திணைக்களத்தின் வேறொரு அலுவல்களுக்காக இந்த கியும் குழாய்களை பயன்படுத்துவதும் இயலுமை தொடர்பாக விடயங்களை கண்டறிந்து வருவதுடன், விரைவாக இந்த குழாய்களை ஏனைய அலுவல்களுக்காக பயன்படுத்துவதற்காக எதிர்பார்க்கப்படுகின்றதென அறிவிக்கப்படுகின்றது.	கொள்வனவு செய்திருந்த கியும் குழாய்கள் வேறு கருமங்களுக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஔ)	தீகவாபி தூபியை பாதுகாப்பதற்காக 2013 – 2014 ஆண்டுகளின் போது தொல் பொருளியல் திணைக்களத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்த 377,000 பொறியியல் செங்கற்கள் எதுவித தொழில்நுட்ப அறிக்கையும் இன்றி கொள்வனவு செய்து காணப்பட்டதால் இலஞ்ச ஊழல்கள் சார்த்துதல்கள் விசாரணை ஆணைக்குழுவினால் விசாரணையொன்று நடாத்துதல் மற்றும் அது தொடர்பாக இறுதித் தீர்ப்பொன்று வழங்கியிருக்காத காரணத்தினால் 12 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் காலநிலை தாக்கங்களினால் அழிவடையும் பாரிய	இது தொடர்பாக இலஞ்ச ஊழல்கள் சார்த்துதல்கள் விசாரணை ஆணைக்குழுவினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன், வழக்கு அலுவல்கள் இதுவரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை என அறிவிக்கப்பட்டிருந்தது.	சிக்கலைத் தீர்ப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	செங்கல் அடுக்குகளுக்கு ஒதுக்கப்பட்டிருந்த தூபியை சுற்றியுள்ள கற்பரப்பு முற்றம் மற்றும் மணல் முற்றத்தை அண்டி குவிக்கப்பட்டிருந்தது.		
(க)	வட மாகாணத்தின் அனேக தொல்பொருளியல் இடங்களின் ஆரம்ப ஆய்வுகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அகல்விரிவான ஆய்வின் மூலம் குறிப்பிட்ட தொடர் தொழல்பொருளியல் கருமங்கள் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இவ்வாறு வடமாகாணத்தில் இனங்காணப்பட்ட 479 தொல்பொருளியல் இடங்களில் 5 இடங்களில் மாத்திரம் அகல்விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது.	வட மாகாணத்தில் இனக் கலவரம் ஏற்படல் மற்றும் தொல்பொருளியல் காணிகள் தொடர்பாக காணப்படும் நிலவுகின்ற சிக்கல் நிலைமையின் மீது அகல்விரிவான ஆய்வொன்று மேற்கொள்வதற்கான செய்முறையொன்று தயாரிப்பதில் தடைகள் காணப்பட்டது. விஷேடமாக சிலசில தொல்பொருள் இடங்கள் (குருந்தி விகாரை, வெடிக்கினாரிமலை, குருகந்தை போன்ற) இடங்களுக்காக நீதி மன்றத்தினால் வழக்கப்பட்டிருந்த தீர்ப்புக்கள் காரணமாக தொல்பொருளியல் உத்தியோகத்தர்களுக்கு அவற்றை முன்னெடுப்பதற்கான சந்தர்ப்பம் காணப்படாததுடன், இது தொடர்பாக நீண்ட அளவு கலந்துரையாடப்பட்டு 2026 ஆண்டு முதல் தொடர்ந்தும் மூன்று வருடங்களில் (2026 – 2028) அகழ்விரிவான ஆய்வு செயற்படுத்துவதற்கு திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. அதேபோல் 2026 ஆண்டு முதல் திணைக்களத்தில் செயற்படுத்தப்படுகின்ற 05 ஆண்டு அபிவிருத்தித் திட்டத்தில் வடக்கு கிழக்கு அகழ்விரிவான ஆய்வு மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.	அகல்விரிவான ஆய்வு அலுவல்கள் மேற்கொள்வதற்காக திட்டமிடப்பட்டு, திட்டத்தின் பிரகாரம் கருமங்கள் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ங)	2010 ஆண்டின் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் வழங்கியிருந்த நிதி மற்றும் தொழில்நுட்ப உதவியின் கீழ் இடர் முகாமைத்துவ நிலையங்கள், மத்திய சுற்றாடல் அதிகாரிசபை மற்றும் தொல்பொருளியல் திணைக்களத்திடையே ஏற்பட்டிருந்த ஒத்துழைப்பு உடன்படிக்கையின் பிரகாரம் ஆரம்பிக்கப்பட்ட ஆரம்ப	வடக்கு கிழக்கு மாகாணங்களில் தொல்பொருளியல் காரணிகளுடனான அனேக காணிகள் தனி நபர்களினால் உரித்தாக்கப்பட்டு காணப்பட்டது. அவ்வாறான காணிகளின் உரிமையை திணைக்களத்திற்கு உரித்தாக்குவதற்காக உரிமையொன்று	1998 இன் 24 ஆம் இலக்க தொல்பொருள் திருத்திய சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டிருந்த 1940 இன் 09 ஆம் இலக்க தொல்பொருள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், தொல்பொருள் இடங்களின் உரிமையை உரித்தாக்கி எல்லை

	ஆய்வுகளுடன் 2018 ஆண்டில் தொல்பொருளியல் பிரதேச அலுவலகங்கள் நிறுவப்பட்டு 2023 ஜூலை மாதம் அளவில் வட மாகாணத்தில் இனங்காணப்பட்ட 479 ஒட்டுமொத்த தொல்பொருளியல் இடங்களில் 252 இடங்களின் உரிமையை உரித்தாக்கி எல்லை தூண்கள் போடப்பட்டு வர்த்தமானி மூலம் பிரசுரிப்பதற்காக 2025 ஆகஸ்ட் 31 திகதி வரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	காணப்படாததுடன், காணி சிக்கல்கள் இன்றிய இடங்கள், தொல்பொருளியல் காப்பு மற்றும் நினைவுச்சின்னங்களாக மாற்றும் போது இடம் தொடர்பான முறையான முழுமையான அறிக்கையொன்று தயாரிக்கப்பட வேண்டும். எனினும், வடக்குக் கிழக்கு மாகாணங்களின் சிங்கள உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை காரணமாக சிங்கள மொழியில் அறிக்கை தயாரிப்பதில் தாமதம் ஏற்பட்டதென அறிவிக்கப்பட்டிருந்தது.	தூண்கள் போடப்பட்டு வர்த்தமானி மூலம் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ச)	நாகதாம்ரான், வவுனிகுளம், சிவபுரம் ஸ்ரீமலே கோவில் ஆகிய இனங்காணப்பட்ட தொல்பொருள் இடிபாடுகள் காணப்பட்ட இடங்களில் தற்போது தூபிக் கட்டணங்களின் மண்மேடுகள் முழுமையாக நிலத்துடன் சமப்படுத்தப்பட்டு அந்த தரைப் பகுதியை மற்றும் நெடுங்கேணி சிவநகர், குளாமுறிப்பு, பொட்டியாமலை ஆகிய தொல்பொருள் இடங்கள் காணப்படும் தூபி மண்மேடுகள் மீது ஏனைய மதவழிபாட்டுத் தளங்கள் நிர்மாணிக்கப்பட்டிரந்தது.	இதற்காக வவுனியா பிரதேச அலுவலகத்தில் இருந்து தகவல் அழைக்கப்பட்டதுடன், பதில் கிடைத்த பின்னர் கணக்காய்விற்கு அனுப்பப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.	1998 இன் 24 ஆம் இலக்க தொல்பொருள் திருத்திய சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டிருந்த 1940 இன் 09 ஆம் இலக்க தொல்பொருள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், தொல்பொருள்களை பாதுகாத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும் என தேவையான இடங்களில் பாதுகாப்பு அமைச்சின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஞ)	வடமாகாணத்தில் அமைந்துள்ள வெடிக்கிநாரி மலை தொல்பொருளியல் இடம், நெலுக்குளம், கிம்புலாகல நந்திமித்ரகம தொல்பொருளியல் வளாகத்தில் காணப்படும் நினைவுச் சின்னம், நெடுங்கேணி சிவநகர் தொல்பொருளியல் இடம், சமலன் குளம் பிரதேச செயலக அதிகார பிரதேசத்தை சேர்ந்த சமலன் குளம் தொல்பொருளியல் இடம், மாதொட துறைமுக நகர் மற்றும் 2008 ஜூன் 06 திகதிய 1553 இலக்கம் கொண்ட வர்த்தமானியின் மூலம் பாதுகாப்பு நினைவுச் சின்னம் என பிரசுரிக்கப்பட்டிருந்திருந்த தோனிகல தொல்பொருளியல் இடம் இதுவரை குறிப்பிட்ட எல்லைகளை இனங்கண்டு தொல்பொருளியல் காப்புப் பிரதேசம் என அல்லது நினைவுச் சின்னம் என வரத்தமானியில் பிரசுரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	சமலன் குளம் தொல்பொருளியல் இடத்திற்காக நிலஅளவைக் கட்டளை வழங்கும் படி 2024 மார்ச் 26 திகதி வவுனியா பிரதேச செயலாளரிடம் வேண்டப்பட்டது. இது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன், இதுவரை பதில் கிடைத்திருக்கவில்லை. அதேபோல், வெடிக்கினாரி மலை மற்றும் தோனிகல தொல்பொருளியல் இடங்கள் காப்பு இடங்களாக வெளியிடுவதற்காக வன பாதுகாப்பாளர் நாயகத்தினால் இணக்கப்பாடொன்று பெற்றுக்கொள்வதற்காக 2024 பெப்ரவரி 02 திகதி வேண்டப்பட்டது. தேவையான	எல்லைகளை இனங்கண்டு தொல்பொருளியல் காப்பு அல்லது நினைவுச் சின்னம் என வர்த்தமானி மூலம் பிரசுரித்தல் மேற்கொள்ளப்பட்டு தொல்பொருளியல் கருமங்கள் கால தாமதம் இன்றி மேற்கொள்ளப்பட வேண்டும்.

		இணக்கப்படுகள் கிடைத்த பின்னர் தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் மற்றும் நெலுக்குளம், கிம்புலாகல நந்திமித்ரகம தொல்பொருளியல் வளாகத்தில் காணப்படும் நினைவுச் சின்னம், நெடுங்கேணி சிவநகர் தொல்பொருளியல் இடம், மாதொட துறைமுக நாகரம் ஆகியவற்றுக்காக காப்பு முன்மொழிவுகள் யாழ்ப்பானம் பிரதேச அலுவலகத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளதுடன், தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என அறிவிக்கப்பட்டுள்ளது.	
(ட)	குருந்துமலை (குரிஞ்சி) தொல்பொருளியல் இடத்தில் இடிபாடுகள் அனேகமாக பரந்து காணப்படுகின்ற 229 ஏக்கர் தரைப் பகுதியில் நில அளவை மேற்கொண்டு நிலஅளவைப் படங்கள் தயாரித்து வழங்கும் படி 2020 நவம்பர் முதல் குறிப்பிட்ட அரச நிறுவனங்களிடம் வேண்டப்பட்ட போதிலும், இந்தக் கருமங்கள் கணக்காய்வுத் திகதி வரை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.	இதற்காக 2021 ஒக்தோபர் 11 திகதி, 2021 நவம்பர் 02 திகதி, 2022 செப்தம்பர் 15 திகதி மற்றும் 2023 மார்ச் 13 ஆகிய திகதிகளில் எழுத்துமூலம் வேண்டுதல் செய்யப்பட்ட போதிலும், கரையோரபற்று பிரதேச செயலாளரினால் இதுவரை பதிலனுப்பியிருக்கவில்லை. அதேபோல், 2022 ஆண்டு முல்லைத்தீவு நீதிமன்றத்தினால் வழங்கியிருந்த தீர்ப்பின் படி குரிஞ்சி விகாரையின் அலுவல்களை தீர்த்துக்கொள்வதற்காக சட்டமா அதிபர் திணைக்களம் தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அதற்காக குழுவொன்று நியமனம் செய்யப்பட்டு பரிந்துரைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன என அறிவிக்கப்பட்டிருந்தது.	குறிப்பிட்ட அரச நிறுவனங்களுடன் தொடர்புகொண்டு நில அளவை அலுவல்கள் மேற்கொண்டு தொல்பொருளியல் காப்புப் பிரதேசம் என வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ண)	2024 ஜூலை 13 திகதி முதல் ஜூலை 18 திகதி வரை தனிப்பட்ட வெளிநாட்டு பிரயாணம் ஒன்றில் ஈடுபட்டிருந்த கட்டிடக்கலை பாதுகாப்பு பணிப்பாளருக்கு ஒதுக்கப்பட்டிருந்த உத்தியோகபூர்வ வாகனம் 2024 ஜூலை 13 திகதி முதல் ஜூலை 17 திகதி வரை தீகவாபி மற்றும் நீலகிரி தூபத்தின் புனித சின்ன புதையல் விழாவிற்காக அங்கீகாரம் ஒன்று பெற்றுக்கொள்ளாமல் 1691 கிலோ மீற்றர் தூரம் ஓடப்பட்டிருந்ததுடன்,	கட்டிடக்கலை பாதுகாப்புப் பணிப்பாளர் வெளிநாடு செல்வதற்காக 2024 ஜூன் 18 திகதி அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்திருந்ததுடன், அங்கீகாரம் 2024 ஜூலை 12 திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அந்த பிரயாணத்திற்காக வெளிப்பட்ட அவரின் வாகனம் திணைக்களத்தின் பொறுப்பில் அத்தியவசிய கடமையொன்றுக்காக	வெளிநாடு செல்லும் போது உத்தியோகபூர்வ வாகனம் திணைக்களத்தின் சேமத்திற்கு ஒப்படைக்க வேண்டியதுடன், பிரயாணத்திற்காக முறையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

அந்த நாட்களின் ஓட்டப் பொழிப்பு பதவியணி உத்தியோகத்தர் என மேற்கூறிய வெளிநாட்டு பிரயாணத்தில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தரினால் கையொப்பமிடப்பட்டிருந்தது. மேலும், தனிப்பட்ட வெளிநாட்டு விடுமுறை பெற்றிருந்த மேற்கூறிய காலப் பகுதியில் வாகனத்தை திணைக்களத்தின் வாகன சேமத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.	பொறுப்பான உத்தியோகத்தர் இருவரை கடமைகளில் ஈடுபடுத்த நேரிட்டதென அறிவிக்கப்பட்டிருந்ததுடன், தனிப்பட்ட வெளிநாட்டு விடுமுறையில் இருக்கும் காலப் பகுதியில் பணிப்பாளர் (கட்டிடக்கலை) இன் உத்தியோகபூர்வ வாகனத்திற்கு ஒப்படைக்க வேண்டும் என பணிப்பாளர் (கட்டிடக்கலை) இதற்கு முன்னர் அறிந்திருக்கவில்லை என அறிவிக்கப்பட்டிருந்தது.	

5 மனிதவள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
தொல்பொருள் திணைக்களத்திற்காக முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் எண்ணிக்கை 250 ஆக காணப்பட்ட போதிலும், 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான பதவியணி 274 ஆக காணப்பட்டமையால் 24 ஆட்களுக்கான மிகை காணப்பட்டது. மேலும், திணைக்களத்தின் தலைமை அலுவலகம் மற்றும் 15 பிரசேத அலுவலங்களுக்கு ஊழியர்கள் இணைக்கும் போது 12 பதவியணிகளில் 385 பதவியணியினர் காணப்பட்டதுடன், உள்ளவாறான ஊழியர் எண்ணிக்கை 498 காணப்பட்டமையால் 113 மிகைகள் காணப்பட்டது. இதன்படி, முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினை திருத்தம் மேற்கொள்வதற்கும், பிரசேத ரீதியாக இணைக்கும் போது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினுள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	தொல்பொருளியல் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 250 அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. 2025 ஜூன் 30 திகதி அளவில் காணப்பட்ட பதவியணியின் படி அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவி வகிக்கும் உத்தியோகத்தர்கள் 24 பேர் மிகையாக சேவையில் ஈடுபட்டிருந்தனர். அத்துடன், அந்த 24 பதவிகளையும் அங்கீகரித்துக்கொள்வதற்காக ARCH/HO/ADM/1/15/32 (iii) இலக்கம் கொண்ட மற்றும் 2025 ஜூலை 17 திகதிய கடிதத்தின் மூலம் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்திற்கு கோறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டதென அறிவிக்கப்பட்டிருந்தது.	மிகை பதவியணி தொடர்பாக முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்கும் திணைக்களத்தின் உள்ளக பதவியணிகளிடையே மாற்றங்கள் மேற்கொள்ளல் தொடர்பாக முறையான செய்முறையொன்று தயாரிக்கப்பட வேண்டும்.